DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதன்கிழமை 30ம் நாள் சாட்சியாகிய கோவர்தனன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பெஞ்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவர்தனன் | வயது | 71 |
| த/பெ. | சஞ்சீவிநாயர் | இனம் | ஆண் |
| கிராமம் | பள்ளூர் | தொழில் | வேலை இல்லை |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C. 05/2021**
(மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி மனுதாரர் தரப்பில் 30.4.2025 எ.சா.1</u>**

1. மனுதாரர் எனது வீட்டில் இல்லை என்றால் சரிதான். என்ன பிரச்சனைக்காக மனுதாரர் வீட்டை விட்டு சென்றார் என்றால் வீட்டை எழுதி தருமாறு பிரச்சனை செய்து சென்றார். எனக்கு மனைவியை விட எனது மகன்கள் தான் முக்கியம் என்றால் சரிதான். எனது மகன்கள் முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் என்றால் சரிதான். மனுதாரருக்கு ஜெயஸ்ரீ என்ற மகள் உள்ளார் என்றால் சரிதான்.

2. நான் சேர்ந்து வாழ மனுதாரருக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். இந்த வழக்கில் அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அறிவிப்பு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அறிவிப்பு எதுவும் மனுதாரருக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3. சேர்ந்து வாழ நான் தனியாக வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் முதல் மனைவியின் மகன்களுக்கு மட்டும் அனுசரணையாக மனுதாரர் அதைபற்றி கேட்டதால் நான் மனுதாரரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன் என்றால் இல்லை. நான்தான் கொரோனா காலத்தில் மனுதாரரின் துணிகளை தெருவில் விட்டெறிந்து மனுதாரர் மற்றும் அவரது மகளை கழுத்தை பிடித்து வெளியேற்றினேன் என்றால் இல்லை. விடியற்காலை 4 மணிக்கு மனுதாரர்தான் வீட்டை விட்டு சென்றுவிட்டார். நான் மனுதாரரை தடுத்தேனா என்றால் அவர் வீட்டை விட்டு சென்றது எனக்கு தெரியாது.

4. நான், மனுதாரரை தேடினேனா என்றாலும், காவல் நிலையத்தில் காணவில்லை என்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மனுதாரரை தேட வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இல்லை என்றால் அவர் சொல்லாமல் சென்றதால் தேடவில்லை. 11.05.2020 ம் தேதி நான்தான் மனுதாரர் மற்றும் அவரது மகளை வீட்டை விட்டு துரத்தினேன் என்றால் இல்லை. எனது மகள் அந்த தேதியில் பனிமலர் கல்லூரியில் பொறியியல் பட்ட படிப்பு படித்து வந்தார் என்றால் சரிதான். நான் வீட்டை விட்டு சென்ற பிறகு மனுதாரரின் மகளுக்கு கல்வி செலவிற்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் வீட்டை விட்டு செல்வதற்கு முன்பு நான் தான் கல்விக்கு ரூபாய் 15 லட்சம் செலவு செய்தேன். நான் அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. மனுதாரர் மற்றும் அவரது மகளை நான் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் எந்த நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகள் வேலையில்லாமல் வீட்டில் தான் உள்ளார் என்றால் சரியல்ல. பள்ளூர் சர்வே எண்.145/2 ல் கிருஷ்ணா ஸ்விட்ஸ் கடை உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கான ஆவணம் எனது பெயரில் உள்ளது என்றால் எனது அண்ணன் பெயரில் உள்ளது. 15.10.2018 ம் தேதி ஆவண எண்.4227/2018 மூலம் புருசோத்தமன் என்பவருக்கு நான் கிரயம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கான கிரயம் தொகையை நான் பெற்று கொண்டேன் என்றால் இல்லை.

6. எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் கம்மவார்பாளையம் இந்தியன் வங்கியில் கணக்கு உள்ளது. அந்த கணக்கில் எவ்வளவு பணம் வந்தது என்றால் ரூபாய் 50 லட்சம் வந்தது. எனக்கு இன்னும் சொத்துகள் உள்ளது என்றால் இல்லை. எனக்கு எத்தனை முறை பணம் வந்தது என்றால் ஒருமுறைதான் வந்தது. எனக்கு பல கோடி ரூபாய்க்கு நிலஇழப்பீடு வந்தது என்றால் இல்லை. என் பெயரில் பலகோடி மதிப்புள்ள சொத்து இன்னும் உள்ளது என்றால் இல்லை. நான் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

7. எனது மகள் மாவட்ட நீதிமன்றத்தில் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது குடும்ப சொத்து பலகோடி

மதிப்புள்ளதாக தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். ஆனால் அதுபோல் சொத்து இல்லை. அந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த எதிர் வழக்குரையில் எனக்கு சொத்து எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளேனா என்றால் ஆமாம். எனக்கு பாகம் வேண்டாம் என்று தெரிவித்துள்ளேனா என்றால் எனக்கு சொத்து இல்லை என்று தெரிவித்துள்ளேன்.

8. நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ முயற்சி எடுக்கவில்லை என்றாலும், எனக்கு போதுமான வசதி உள்ளது என்றாலும், மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு ஜீவனாம்சம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.